# உணவுத் துறை குறித்த அறிவிப்புகள்

1. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு முழுமையாக சென்றடைவதையும், அவை பொது மக்களுக்கு முறையாக வழங்கப்படுவதையும் கண்காணிப்பதற்கு ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய மின் ஆளுமை குழுமத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே அறிவித்தவாறு அந்தியோதயா அன்ன யோஜனா

திட்டத்தில் தற்போது பயன்பெறுவோரின் பட்டியலில் தகுதியற்ற பயனாளிகள் உள்ளதாக பல புகார்கள் எழுந்துள்ளன எனவே இந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்து தகுதியான பயனாளிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறத் தக்க வகையில் ஒரு குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.** நியாய விலைக் கடைகளை தீவிரமாக கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு உள்வட்ட அளவிலும் (பிர்க்கா) வருவாய் ஆய்வாளரை அல்லது கூட்டுறவுத் துறை சார் பதிவாளரை ஒருங்கிணைப்பாளராக கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் 2 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், 3 பொது நல ஆர்வலர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்

இடம்பெறுவர். இந்த குழு மாவட்டத்திலுள்ள **5** உள் வட்டங்களில் **(**பிர்க்கா**)** பரீட்சார்த்தமாக செய்து பின்பு படிப்படியாக அனைத்து வருவாய் உள் வட்டங்களிலும் அமைக்கப்படும்.

**4.** கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை மலைப்பகுதிக்கு நீலகிரி மாவட்ட மலைப்பகுதிக்கு வழங்கப்படும் அளவில் குடும்பஅட்டைதாரர்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**5.** பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப் படுவதை சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் **36** மண்ணெண்ணெய்

நிலையங்களும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்படும்.

6. வெளி மாநிலங்களுக்கு அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்துவதைத் தடுப்பதற்கு கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்புப்படை வீதம் 5 சிறப்புப் படைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு சிறப்புப் படையிலும் 1 துணை கண்காணிப்பாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 6 காவலர்களும் இடம் பெறுவர். இச்சிறப்புப்படை மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

7. பொது விநியோகத்தினை சிறப்பாக கண்காணிப்பதற்கும், அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தலை கட்டுப் படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர் அனைவருக்கும் நடப்பாண்டில் வாகன வசதி செய்து தரப்படும்.

8. நியாய விலைக் கடைகளை கண்காணிக்கவும், பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் மண்ணெண்ணெய் வெளிச் சந்தைக்கு கடத்தப்படுவதை தடுக்கவும், நுகர்பொருள் வழங்கல் துறையின் களப்பணியாளர்களுக்கு செல்லிட தொலைபேசி இணைப்புகள் ரூ.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**9.** அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் கடத்துபவர்களைப் பற்றி துல்லியமாக தகவல் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். இவர்களின் பெயர் மற்றும் முகவரி இரகசியமாக வைக்கப்படும். உணவு அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலர், சிறப்பு ஆணையர், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு இத் தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டும். சன்மானம் வழங்குவதற்கான இரகசிய நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்வகிக்கப்படும்.

10. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் எல்லையோர மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றிற்கு ஒரு பிரிவு வீதம் நான்கு பிரிவுகள் கூடுதலாக அமைக்கப்படும்.

11. போலி குடும்ப அட்டைகளை வைத்திருக்கும் ஒரு சில நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவற்றை திருப்பி ஒப்படைக்கவில்லையென்றால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்படுவார்கள். காலக்கெடு முடிந்தபின்னர், அவர்களிடம் போலி அட்டைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதோடு குற்ற நடவடிக்கையும்

தொடரப்படும். நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் செய்யும் விற்பனையாளர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**12.** நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்து விற்பனை செய்ய ஏதுவாக கிடங்கு, களம், அலுவலகம் ஆகிய வசதிகளுடன் **2001–2002**ம் ஆண்டு வரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால் முந்தைய ஆட்சியில் **2002–2003**ம் ஆண்டு முதல் இப்பணி நிறுத்தப்பட்டு விட்டது. விவசாயிகளின் வசதிக்காக இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தவும் நடப்பு நிதியாண்டில் **10**

கொள்முதல் நிலையங்கள் கட்டவும் அரசு முடிவுசெய்துள்ளது.

13. ஆண்டுதோறும் நெல் கொள்முதல் செய்யும்பொழுது கொள்முதல் நிலையங்களில் தவறுகள் நடைபெறுவதாகவும், விவசாயிகள் துன்புறுத்தப் படுவதாகவும் புகார்கள் எழுவதுண்டு. இத்தகைய புகார்கள் இந்தாண்டு எழாதவண்ணம், நெல் கொள்முதல் பணி குறைபாடின்றி நடைபெற ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் சட்டமன்ற அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவை அமைத்து, கொள்முதலில் ஏற்படும் குறைபாடுகளை அவ்வப்போது களைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட ஆட்சியர்கள் நியமிப்பார்கள்.

14. தமிழ் நாட்டில் தற்பொழுது 209 வட்டார செயல்முறை கிடங்குகள் மூலமாக பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது. இதில் 37 கிடங்குகள் தனியாருக்கு சொந்தமான வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கிடங்குகளில் போதிய வசதிகள் இல்லாததாலும், அறிவியல் நுட்பப்படி அமைக்கப்படாததாலும் படிப்படியாக இந்த இடங்களில் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக புதிய கிடங்குகள் அமைக்கப்படும். இந்த ஆண்டு பவானி, பேரையூர், வால்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் வட்டார கிடங்குகள் ரூ.125 இலட்சம் செலவில் கட்டப்படும்.

15. நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் எடை குறைவை தவிர்ப்பதற்கு மின்னணு எடை இயந்திரங்களே இனி முழுமையாக பயன்படுத்தப்படும். இதனால் கிடங்குகளில் எடை சீரமைப்பு பணி துரிதப்படுத்தப்படும்.

16. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,149 அமுதம் நியாய விலைக்கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில், 824 கடைகளில் மின்னணு எடை இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அனைத்து கடைகளிலும் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவும் நோக்கத்துடன் மீதமுள்ள 325 கடைகளிலும் ரூ.16.25 இலட்சம் செலவில் நடப்பாண்டில் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவப்படும்.

17. நடப்பாண்டில் தமிழ் நாடு சேமிப்பு நிறுவனம், 6250 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றினை தருமபுரியிலும், 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை பல்லடத்திலும், 2000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை அவிநாசியிலும் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

18. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு ஏற்படும் எந்தவொரு குறை பாட்டினையும் உணவு அமைச்சருக்கும், அவருடைய அலுவலகத்திற்கும் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் தெரிவிப்பதற்கு தொடர்பு தொலைபேசி எண்கள் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரப் படுத்தப்படும். குடும்ப அட்டைகள் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள்,

எடை குறைவு, பொருட்கள் வழங்கப்படாதது, கூடுதல் விலையில் பொருட்களை விற்பது, கடைகளை உரிய நேரத்தில் திறக்காமல் இருப்பது இதர பொருட்களை வாங்குவதற்கு நிர்ப்பந்திப்பது போன்ற குறைகளைக் குறித்த தகவல்களை இந்த தொலைபேசி எண்களுக்கு தெரிவிக்கலாம். தகவல்கள் பெற்ற 48 மணி நேரத்திற்குள் இக்குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

19. பொது மக்களின் வசதியை கருத்தில் கொண்டு பகுதி நேர கடைகள் திறக்க இரு நியாய விலை கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் என்பதை 1 1/2 கிலோ மீட்டராக குறைத்தும் ஒரு நியாய விலைகடைக்கு

குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப் படவேண்டும் என்பதை தளர்த்தி 150 குடும்ப அட்டைகள் என்றும் வழிமுறைகள் மாற்றி அமைக்கப்படும். இதனால் பல குக்கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் அப்பகுதியிலேயே பொது விநியோகத் திட்டத்தில் பொருட்களை பெற இயலும்.